# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்

**நிலையறிபரீட்சை– 2021**

## புவியியல்

| பெயர் /சுட்டெண் :- ………………… | தரம் :- 8 | நேரம் :- 2மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

- **பகுதி I இல் 20 வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு விடைகளில் சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ஞாயிற்றுத் தொகுதி எனப்படுவது

(1) பலஆயிரம் நட்சத்திரங்களை உடையது

(2) சூரியனை துணைக்கோளாக உடையது

(3) சூரியனை மையமாகக் கொண்டது

(4) இற்றைக்கு 1000 மில்லியன் வருடமுடையது

02. சூரியனின் வெப்பநிலையானது

(1) 15 000$^{0}$C ஆக மத்தியில் உள்ளது. (2) 6 000$^{0}$C ஆக மேற்பரப்பில் உள்ளது.

(3) 600$^{0}$C ஆக மேற்பரப்பில் உள்ளது. (4) 15 000 000$^{0}$C ஆக மேற்பரப்பில் உள்ளது.

03. சூரியப் புயல்கள் எனப்படுபவை

(1) உள்ளே நடக்கும் செயற்பாடு (2) பூமியில் ஏற்படும் புயல்கள்

(3) சூரிய மேற்பரப்புச் சுவாலைகள் (4) ஏனைய கோள்களில் ஏற்படுபவை

04. கோள்கள் எப்பொழுதும்

(1) ஒளியை விட்டுவிட்டுக் காலும் (2) சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றுவன

(3) யாவும் சமவடிவமுடையன (4) சூரியனை விடப் அளவில் பெரியன

05. அகக்கோள்களாக அமைவன

(1) புதன்,வெள்ளி,புவி,செவ்வாய் (2) புதன்,வெள்ளி,செவ்வாய்,வியாழன்

(3) வியாழன்,சனி,யுரேனஸ்,நெப்ரியூன் (4) புதன்,வெள்ளி,வியாழன்,சனி

06. புதன் கோள் தொடர்பான சரியான கூற்று

(1) சூரியனுக்குத் தொலைவில் உள்ளது (2) வேகமாகச் சுழலும் கோள்

(3) வெப்பநிலைகுறைவானது (4) ஞாயிற்றுத் தொகுதியில் மிகச் சிறியகோள்



kalvi.lk

07. வெள்ளிக் கோள் தொடர்பான **தவறான** கூற்று

(1) புவிக்கு மிக அண்மையிலுள்ளது (2) புவியை விடப் பருமனில் பெரியது

(3) இரவுவானில் தெளிவாகத் தெரியும் (4) கிழக்கிலிருந்து மேற்காகச் சுழல்வது

08. செங்கோள் என அழைக்கப்படுவது

(1) புவி (2) வியாழன் (3) வெள்ளி (4) செவ்வாய்

09. சூரியினில் இருந்து தூரத்தின் அடிப்படையில் ஐந்தாவதாக அமையும் கோள்

(1) வியாழன் (2) புவி (3) செவ்வாய் (4) சனி

10.அதிக உபகோள்களை உடையகோள்கள் முறையே

(1) சனி,வியாழன்,யுரேனஸ் (2) யுரேனஸ்,வியாழன்,சனி

(3) வியாழன்,சனி,யுரேனஸ் (4) யுரேனஸ்,சனி,வியாழன்

11. புவியின் மத்திய கோட்டு,முனைவுவிட்டங்கள் அமையும் சரியானவிதம்

(1) இரண்டுமே சமஅளவுடையவை (2) முனைவுவிட்டம் பெரியது

(3) மத்திய கோட்டு விட்டம் பெரியது (4) மத்திய கோட்டு விட்டம் சிறியது

12. புவியின் சுற்றுகை வேகம்

(1) செக்கனுக்கு 29.8 கி.மீ (2) செக்கனுக்கு 11.2 கி.மீ

(3) செக்கனுக்கு 56 கி.மீ (4) செக்கனுக்கு 150 மில்லியன் கி.மீ

13. புவியில் உயிரினங்கள் வாழக் காரணமாவது

(1) ஞாயிற்றுத் தொகுதியில் தொலைவில் அமைவது

(2) சூரியனுக்கு அண்மையில் உள்ளது

(3) ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியே அமைவது

(4) ஞாயிற்றுத் தொகுதியில் மத்தியில் அமைவது

14. நெடுங்கோடுகள் எனப்படுபவை

(1) கிழக்குமேற்காக அமைவன (2) புவியை வட,தென் கோளங்களாகப் பிரிப்பன

(3) சமமற்ற அளவுடையன (4) வடக்குத் தெற்காக வரையப்படுவன

15. உலகில் நேரமாற்றம் ஏற்படக் காரணம்

(1) புவி கிழக்கிலிருந்து மேற்காகச் சுழல்வது

(2) புவி மேற்கில் இருந்து கிழக்காகச் சுழலவது

(3) அகலக்கோடுகள் சூரிய உச்சம் பெறுவது

(4) புவி நீள்வட்டப்பாதையில் பயணிப்பது



kalvi.lk

16. ஒப்பீட்டளவில் அதிக நியம நேரவலயம் கொண்ட நாடு

(1) சீனா (2) ரஷ்யா (3) இந்தியா (4) இலங்கை

17. கோடை காலத்தின் பிரதான இயல்பு

(1) பகற்காலம் நீண்டதாகும் (2) இரவுக்காலம் நீண்டதாகும்

(3) இரவும் பகலும் சமமானதாகும் (4) இரு அரைக்கோளங்களும் சமகாலமுடையன

18. புறஊதாக்கதிர்கள் புவியை அடைவதைத் தடுப்பது

(1) வளிமண்டலம் (2) சூரியன் (3) புவிச்சுழற்சி (4) ஓசோன்படை

19. புவியில் உயிரினங்கள் வாழக் காரணமான வாயு

(1) ஒட்சிசன் (2) ஆகன் (3) ஓசோன் (4) நைதரசன்

20. புவியின் நீர் மாசுபாட்டிற்கு பிரதான காரணம்

(1) நன்னீர் அளவுகுறைவாயிருப்பது (2) சமுத்திரங்கள் அதிகளவு இருப்பது

(3) மனிததேவைகளுக்குப் பயன்படுவது (4) நீரியல் வட்டம் காணப்படுவது

(20 X 2 = 40புள்ளிகள்)

## பகுதி II

- **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. (I) ஞாயிற்றுத் தொகுதியின் வான் பொருட்கள் மூன்றுதருக. (3 புள்ளிகள்)

(II) கோள்களும் நட்சத்திரங்களும் ஒன்றில் இருந்து ஒன்று எவ்வாறு வேறுபடுகின்றன? (4 புள்ளிகள்)

(III) சூரியனின் பண்புகள் நான்கு தருக. (5 புள்ளிகள்)

02. (I) அகக்கோள்கள் புறக்கோள்கள் என்பவற்றை எவ்வாறு எல்லைப்படுத்தலாம்? (3புள்ளிகள்)

(II) சிறுகோள்கள் எனப்படுபவை யாவை விளக்கம் தருக. (4புள்ளிகள்)

(III) புவியின் இயல்புகள் நான்கு தருக. (5புள்ளிகள்)

03. (I) உபகோள்கள் என்பவையாவை? (3புள்ளிகள்)

(II) அதிக உபகோள்களைக் கொண்ட நான்கு கோள்களைப் பெயரிடுக. (4புள்ளிகள்)

(III) சூரிய,சந்திரனை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் நிலவும் நான்கு நம்பிக்கைகளைத் தருக (5புள்ளிகள்)



kalvi.lk

04. (i) அரைக்கோளம் என்பதால் கருதப்படுவது யாது? இலங்கை எவ்வரைக் கோளத்தில் அமைந்துள்ளது. (3புள்ளிகள்)

(II) நெடுங்கோடுகளின் இயல்புகள் நான்கு தருக. (4புள்ளிகள்)

(III) நெடுங்கோடுகளுக்கிடையில் நேர வேறுபாடு ஏன் ஏற்படுகின்றது விளக்கம் தருக. (5புள்ளிகள்)

05. (I) உலகின் உள்ளூர் நியமரேநத்தைப் பயன்படுத்தும் மூன்று நாடுகளைத் தருக. (3புள்ளிகள்)

(II) புவிச்சுழற்சியால் ஏற்படும் விளைவுகளைத் தருக. (4புள்ளிகள்)

(III) சூரியனுடன் தொடர்பான புவியின் அமைவிடம் காரணமாக புவியின் நிலைமையினை விளக்குக. (5புள்ளிகள்)

06. (I) புவியின் பிரதான பருவங்கள் நான்கையும் தருக. (4புள்ளிகள்)

(II) சமவிராக்கால மாதங்கள் இரண்டையும் தருக. (4புள்ளிகள்)

(III) பருவகால மாற்றம் ஏற்படக் காரணமாக அமையும் நிலைமையினை விளக்குக. (5புள்ளிகள்)

07. (I) புவியின் நீர் காணப்படும் பிரதான மூன்று வடிவங்களையும் தருக. (3 புள்ளிகள்)

(II) உலகில் நீர் பரம்பியுள்ள பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

(III) நீர் மாசுபடக் காரணமாக அமையும் மனித நடவடிக்கைகள் நான்கு தருக. (5 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457